சூரியகாந்தி எண்ணெயை, அதாவது சைனோலா எண்ணெயைப் பற்றிச் சொன்னார்கள். இதில் மூன்று நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சொன்னார்கள். இந்த மூன்று நிறுவனங்கள் என்னென்ன என்பதைப் பற்றிச் சொல்ல முடியுமா? அவற்றில் ஒன்று ஐ.டி.ஸி. என்று தெரிகிறது. இந்த சூரியகாந்தி செடி சூரிய வெப்பத்தில் பயிராகக்கூடிய ஒரு செடி. இதில் கொலஸ்ட்டிராலைக் கட்டுப்படுத்தக்கூடிய எண்ணெய் தயாராகின்றது. இதை மக்கள் அதிகமாக விரும்பி உபயோகிப்பதாலும் நமது மாநிலத்தில் சூரிய வெப்பம் அதிகமாக இருப்பதால் இந்தச் செடியை அதிக அளவில் பயிர் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று நிறுவனங்கள் என்பது, ஐ.டி.ஸி., பொள்ளாச்சி மகாலிங்கம் கம்பெனி மற்றும் ஒரு தனியார் நிறுவனம் என்பது மட்டும் எனக்குத் தெரியும். இன்றைக்கு சூரியகாந்தி பயிரிடப்படும் பயிர்களின் பரப்பு நமது புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் விரிவடைந்திருக்கிறது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். இதற்கு முன்பு இந்த முழு அளவு திறன் கொண்ட விதைகள் தமிழ்நாட்டில் கிடைக்காத சூழ்நிலை இருந்தது. அப்போது பிற மாநிலங்களில்தான் வாங்கிக் கொண்டிருந்தோம். ஆனால் தற்போது நாம் தனித்தன்மை பெற்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் ஒட்டு விதைகள் (hybrid seeds) இதை மினிக்கட்டு மூலமாக ப்ரடூஸ் செய்ய கொடுத்து இருக்கிறோம். எனவே அதனுடைய பரப்பு உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 512, திரு. கா. பூ. முனுசாமி, இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

512—

மினரல் வாட்டருக்கு விற்பனை வரி

*** 25063 -** திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மே 2]

(அ) தமிழகத்தில் விற்பனை செய்யப்படும் மினரல் வாட்டருக்கு விற்பனை வரி வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் மினரல் தண்ணீருக்கு விற்பனை வரியாக 8 சதவீதம் விதிக்கப்படுகிறது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினரல் வாட்டர் என்பது இப்பொழுது ஒரு பாஷனாக எல்லா இடங்களிலும், பஸ் நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் அதிகமான அளவிலே விற்கிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் 8 சதவீதம் வரி விதிக்கிறார்கள். இது மிகவும் குறைவாக இருக்கிறது. ஏனென்றால், ஒரு பாட்டில் விலையைக் கேட்டால் 12 ரூபாய், 20 ரூபாய் என்று சொல்கிறார்கள். நேற்று வேலூரில்கூட இதுகுறித்து விசாரித்தபோது 65 ரூபாய் என்று சொன்னார்கள். ஆகவே இதற்குக் கூடுதலாக வரி விதிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த மினரல் வாட்டருக்கு 8% வரி விதித்திருப்பது உயர்த்தப்படுமா எனக் கேட்டார்கள். தண்ணீருக்கென்று தனியாக வரி விதிப்பதில் குறிப்பிடப்படவில்லை. இது பட்டியலில் சேராத பொருளாக இருக்கிறது. பட்டியலில் சேராத பொருளுக்கு எதுவாக இருந்தாலும் அதற்கு 8% வரிதான் போடவேண்டுமென்று தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இதற்கு 8% வரியே போதுமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினரல் வாட்டரை ப்ராக்டிகல்லாக ஒரு நாளைக்கு நான் 6 லிட்டர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். இதனால் எந்த நோயும் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்கிறேன். ஆக மினரல் வாட்டர் என்பது சிறப்பான முறையில் அமைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதே நேரத்தில்....

[1995 மே 2

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த 2 ஆண்டுகள்தான் நீங்கள் நோயாளி போலவே இருக்கிறீர்கள், நான் பார்த்த பார்வையில். உள்ளூர் தண்ணீரை சாப்பிட்டுக் கொண்டிருந்த காலத்தில் எல்லாம் நன்றாக இருந்தீர்கள்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அதனுடைய விலை வந்து, மாண்புமிகு திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் சொன்னதுபோல, 16, 18 ரூபாய் விற்கிறது. அதற்குக் காரணம் வரி போடுகிறீர்கள். மஹாராஷ்டிரா மற்ற மாநிலங்களில் எல்லாம் அதற்கு வரி கிடையாது. பாண்டிச்சேரியிலே கூட வரி கிடையாது. பாண்டிச்சேரியிலே மினரல் வாட்டர் 16 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு நிறுவனங்களின் மினரல் வாட்டர் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. காரணம் வரியை அதிகமாகப் போடுவதுதான் என்று கருதுகிறேன். அந்த வரியைக் குறைத்துக் கொடுக்கவேண்டும். மினரல் வாட்டர் என்பது எல்லோரும் அதைச் சாப்பிடுகிறார்கள். சாதாரணமாக எல்லோருமே மினரல் வாட்டரைச் சாப்பிடுகின்ற சூழ்நிலை வந்தாகிவிட்டது. வாட்டரிலே பூச்சி இருக்கிறது என்ற காரணத்தாலே டிஸ்ட்டில்ட் வாட்டர் அல்லது மினரல் வாட்டர் சாப்பிடுகிற சூழ்நிலை வந்தாகிவிட்டது. ஆகவே இதை மறுபரிசீலனை செய்து வரியைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினரல் வாட்டருக்கு ஒரு லிட்டருக்கு 15 ரூபாய்க்கு மேல் விலை இருக்கிறது. வரி போடுவதால்தான் விலை அந்த அளவிற்குக் கூடுதலாக உள்ளது என்று சொல்கிறார். 15 ரூபாய்க்கு விற்கப்பட்டால் அந்த விலைக்கு 8 சதவிகிதம் வரிகட்ட வேண்டுமென்று விதிமுறை உள்ளது. வரி போடுவதால் அதன் விலை உயரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். 25 ஆண்டுக் காலத்திற்கு முன்பு ஒரு லிட்டர் பெட்ரோல் விலையே 2 ரூபாய்க்குள் இருந்தது. ஒரு ரூபாயிலிருந்து 2 ரூபாய் வரை இருந்தது. இன்றையதினம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ஒரு லிட்டர் 15 ரூபாய் என்று விற்கப்படுவது என்பது எந்த வகையில் நியாயம் ? புதிய தொழிலாக இருப்பதனால் மிக அதிகமான விலையை வைத்து விற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் வரி போடுவது தவறான காரியமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நாளைக்கு 6 லிட்டர் தண்ணீர் குடிப்பவர் என்று சொன்னால் 90 ரூபாய் குடிதண்ணீருக்காகச் செலவு செய்து

கொண்டிருக்கின்றார்கள் என்பது பொருள். 90 ரூபாய் குடி தண்ணீருக்காகச் செலவு செய்து கொண்டு இருப்பவர் அந்த 90 ரூபாய்க்கு 8 சதவிகித வரி கட்டுவது தவறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். பூராசாமி. (குறுக்கீடு) இந்தத் தொழிலிலே ரொம்பத் தொடர்பு இல்லாதவர் கேள்வி கேட்கலாம். தொடர்பு இருக்கின்றவர்கள் கேள்வி கேட்கக் கூடாது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினரல் வாட்டர் என்பது அநியாயமாக அதிக விலைக்கு விற்கிறார்கள். ஒரு லிட்டர் பாலே 6 ரூபாய், 7 ரூபாய் என்று நாம் கொள்முதல் செய்கின்றோம். இந்த கொள்ளை லாபத்தைத் தடுக்க வேண்டுமென்றால் நமது அரசே அந்த மினரல் வாட்டர் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டும். குறைந்த விலையிலே நாம் கொடுக்கமுடியும். ஆகவே தனியார்களால் விற்கப்படுகின்ற அந்த மினரல் வாட்டர் விற்பனைக்குத் தடை விதித்து தமிழக அரசு, இதய தெய்வத்தின் புரட்சித் தலைவியின் அரசு அந்தக் கம்பெனியைத் தமிழக அரசின் ஆதரவில் ஆரம்பித்து அதைக் குறைந்த விலையில் விற்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு துறையை நிறுவி மினரல் வாட்டரைத் தயாரித்து விற்குமேயானால் அதற்கும் வரி போடும் என்னுடைய துறை. வணிகவரித் துறை உற்பத்தி செய்யக்கூடிய துறையல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கிக் கொள்கிறேன். அதே நேரத்தில் அவர் சொன்ன யோசனை மிக நல்ல யோசனை. குடி தண்ணீருக்கு மிக அதிகமான விலை கொடுக்கப்பட வேண்டிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்த விலை கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் அவர் ஒரு நல்ல ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார். அதனைச் சம்பந்தப்பட்ட துறைதான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு வந்தாலே மினரல் வாட்டர்தான் குடிக்க வேண்டியிருக்கிறது. ** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மினரல் வாட்டரைத்தான் குடிக்க வேண்டும் என்று ஏதாவது ஸ்பெசிஃபை பண்ணிச் சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த மினரல் வாட்டராக இருந்தாலும், வரி போடுவதோடு அவருடைய வேலை சரி. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேள்வியாகப் போட்டால் அவர் மருத்துவ ரீதியாக ஏதாவது சொல்வார். (குறுக்கீடு).

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் கேள்வி நேரத்திலே வராது. (குறுக்கீடு). அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனென்றால் தண்ணீர் மிகவும் முக்கியமானது. குடிநீர் ஒரு வேளைக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரை மாற்றி கேள்வியைப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்காகவே சொல்கிறேன். (குறுக்கீடு).

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரி போடுவதோடு இந்த அமைச்சருடைய வேலை சரி. எந்தத் தண்ணீர் நல்ல தண்ணீர் என்று அந்த அமைச்சர்தான் சொல்லலாம். (குறுக்கீடு). நீங்கள் அமைச்சரை மாற்றி கேள்வியைப் போட்டுக் கொண்டு இருக்கின்றீர்கள். தனிக்கேள்வி போடுங்கள். வரிபோடுகின்றவர்களுக்கு அந்த வேலை கிடையாது. டாக்டர் ச. ஆரோக்கியசாமி ** என்று சொன்னார். அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. திரு. மு. நடேசன்.

முற்பகல் 10-30

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினரல் வாட்டர் கம்பெனிகள் எல்லாம் இன்றையதினம் புற்றீசல்போல் வளர்ந்து விட்டன. ஒருசில மினரல் வாட்டர் கம்பெனிகளைப் பார்க்கும்போது தரமுள்ளனவாக இருக்கின்றன. பல மினரல் வாட்டர் கம்பெனிகள் தரமில்லாத நிலையிலே இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இதை ஒழுங்குபடுத்த ஒரு சட்டம் இயற்றப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் தனி கேள்வியாகப் போட வேண்டும். ஆரோக்கியசாமிக்கும் அதைத்தானே சொன்னேன். இந்த அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல முடியாது. நீங்கள் வரி சம்பந்தமாக ஏதாவது கேட்பதாக இருந்தால் கேட்கலாம். திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மினரல் வாட்டர் கம்பெனிகள் எத்தனை இருக்கின்றன ? வரி கட்டாமல் ஏதாவது கம்பெனிகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது எத்தனை கம்பெனிகள் மினரல் வாட்டர் உற்பத்தி செய்கின்றன என்ற எண்ணிக்கை தற்போது என்னிடம் இல்லை. எந்தெந்த கம்பெனிகள் மினரல் வாட்டர் உற்பத்தி செய்கின்றனவோ அந்தந்த கம்பெனிகள் எல்லாம் கட்டாயமாக வரி கட்டியே ஆக வேண்டும். நாங்கள் யாரையும் விட்டு வைக்கவில்லை. எல்லோரிடமும் வரி வசூல் செய்து கொண்டிருக்கின்றோம். ஏற்கெனவே ஒரு உறுப்பினர் இங்கே துணைக் கேள்வி கேட்கும்போது அண்டை மாநிலங்களில் வரி இல்லை என்ற ஒரு தகவலைச் சொன்னார். அவருக்காக இந்த நேரத்தில் சேர்த்து சொல்லுகின்றேன், கேரளாவில் 12.5 சதவிகிதமும், கர்நாடகாவில் 8 சதவிகிதமும், ஆந்திராவில் 5 சதவிகிதமும் மினரல் வாட்டருக்கு வரி விதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினரல் வாட்டர் ஒரு லிட்டர் பேக்கிலும் வருகிறது. இப்பொழுது சில கம்பெனிகள் அதை 12 லிட்டர் கேனில்கூட விற்பனை செய்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது, ஒரு லிட்டர் பாட்டில் 15 ரூபாய்க்கு விற்கிறார்கள். அதே நேரத்தில் 12 லிட்டர் கேனை 10 ரூபாய்க்கு விற்கிறார்கள். வரி என்று பார்க்கிறபொழுது இந்த 12 லிட்டருக்கு குறைந்த அளவிலே வரி விதிக்கப்படுகிறது. ஆனால், ஒரு லிட்டர் கேனில் வருகிறபோது அவர்கள் 15 ரூபாய்க்கு வரி கட்டுகிறார்கள். ஆகவே, கொள்ளை லாபம் ஒரு லிட்டர் பேக்கில் விற்பனை செய்வதில் அவர்களுக்கு கிடைக்கிறது. எனவே, இதுபோன்ற பல்க் பேக்குகள், இன்னும் அதிகமான 25 லிட்டர், 50 லிட்டர் என்ற அளவுக்கு பல்க் பேக்குகளை பேக் செய்தால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்

திரு. சிங்காரம் போன்றவர்களுக்கு எல்லாம் மிக உபயோகமாக இருக்கும். அவர்களுக்கு 90 ரூபாய் ஒரு நாளைக்கு செலவாகாது. ஆகவே. இதுபோன்ற திட்டங்களுக்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு தி ந. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு லிட்டர் பாட்டிலில் மினரல் வாட்டர் 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றும், அதேநேரத்தில் 12 லிட்டர் கேன் மினரல் வாட்டர் 10 ரூபாய்க்குதான் விற்கப்படுகிறது என்பதும் ஒரு தவறான செய்தியாக இருக்கலாம். அது சாதாரண தண்ணீராக இருக்கலாம். மினரல் வாட்டராகவோ, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீராகவோ இல்லாமல், சாதாரண குடிநீரை பெரிய கேன்களில் விற்கலாம். அப்படி விற்கப்பட்டால்கூட, சாதாரண தண்ணீரை சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் என்றோ அல்லது சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை சாதாரண தண்ணீர் என்றோ விற்று வரி ஏய்ப்பு என்கின்ற நிலைமை ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு தற்போது ஜாடிகளிலோ, ஜெர்ரி கேன்களிலோ விற்கப்பட்டாலும் விற்பனை வரி உண்டு என்ற தெளிவான நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் புருஷோத்தமன்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் உற்பத்தி ஆகின்ற மினரல் வாட்டருக்கு 8 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. மேலும், தமிழகத்தில் உற்பத்தி ஆகிற மினரல் வாட்டர் விலை குறைவாக இருக்கிறது. பாண்டிச்சேரி மற்றும் கேரளா மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வருகிற மினரல் வாட்டர் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு கூடுதல் வரி விதிக்கக்கூடிய திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு தி ந. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ரூபாய் என்று விற்றால் அதற்கு 8 சதவிகிதம், 20 ரூபாய் என்று விற்றால் அதற்கும் 8 சதவிகிதம். எவ்வளவு விலை உயர்த்திக் கொள்கிறார்களோ அதற்கு ஏற்ற வரி விகிதாச்சாரப்படி கூடுதலாக நமக்கு வந்து சேரும். ஆகவே, விலை 10 ரூபாய் என்றால் ஒரு வரி, விலை 20 ரூபாய் என்றால் ஒரு வரி என்று விதிக்க முடியாது. நாம் போடுவது சதவிகித முறை என்பதால், விலை ஏற்ற இறக்கங்களுக்குத் தகுந்தாற்போல் வரி வந்து சேரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கலியபெருமாள்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** குடிசையில் வாழ்கின்ற மக்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு, அந்த அளவுக்கு, அவ்வளவு செலவழித்து மினரல் வாட்டர் வாங்கி குடிக்க முடியாது. அதற்கு, அரசே, இனாமாக குடிசையில் வாழ்கின்ற மக்களுக்கு இந்த மினரல் வாட்டரை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். இந்த அமைச்சரிடத்தில் வரி போடுவது பற்றி மட்டும் கேட்கலாம். திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீருக்கு வரி இல்லை. அமைச்சர் அவர்கள் இதற்கு வரி விதிக்கப்படுகின்றது என்றும் தண்ணீருக்கு மட்டும் வரி விதிக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். தண்ணீருடைய எடை குறைவாக இருந்தாலும், அது நிரப்பப்படுகிற கன்டெயினர்களுக்கு என்ன வரி விகிதம் விதிக்கப்படுகிறது ? அதை உபயோகப்படுத்துகிறவர்கள் பலதரப் பட்டவர்கள். அதைத் தயாரிக்கும் நிறுவனங்களும் பாலி பேக் என்று சொல்லக்கூடிய ஒரு பாட்டிலில் அடைத்து விற்கிறார்கள். அந்த poly pack, பாட்டில்கள் தரம் குறைக்கப்படுவதால், வரி விகிதமும் அதற்குத் தக்கபடி குறைக்கப்படுகிறதா ? சுப்பிரியர் குவாலிட்டி என்றால் வரி அதிகமாக விதிக்கப்படுகிறதா என்பதை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரைக் கொண்டிருக்கிற கன்டெயினர்கள் தனியாக வேறு இடத்தில் உற்பத்தி செய்து, அதை இவர்கள் விலைக்கு வாங்கினால், விலைக்கு வாங்கும்போதே அந்தப் பொருள்களுக்கு ஏற்கெனவே வரி விதிக்கப்பட்டு விடும். அப்படியில்லாமல், கன்டெயினரையும் உற்பத்தி செய்பவரே, தண்ணீரையும் சுத்திகரிப்பு செய்து, இரண்டையும் சேர்த்து விற்பாரேயானால் கன்டெயினருக்கு உரிய விலையும், தண்ணீருக்கு உரிய விலையும் சேர்த்தே நிர்ணயிக்கப்படும். அதற்கு வரி விதிக்கின்றபோது அது ஒட்டுமொத்த வரிவிதிப்புக்கு இரண்டு பொருட்களும் உட்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கிருஷ்ணன்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியில் தயாராகும் மினரல் வாட்டருக்கு வரிவிதிப்பு இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே மினரல் வாட்டர் நம்முடைய தமிழ்நாட்டுக்கு வருகின்றபோது தமிழக அரசால் அவற்றுக்கு வரி விதிக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் என்ன நிலைமை இருந்தாலும், தமிழ்நாட்டில் எந்தெந்தப் பொருள்களுக்கு நாம் வரி விதிக்கிறோமோ, அவை எந்த மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தாலும் இங்கே வந்து விற்பனை செய்தால் வரி விதிப்புக்கு உட்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினரல் வாட்டர் மூலமாக வருகின்ற வரியினுடைய வருமானம் ஓராண்டுக்கு எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற வினாவிற்கு என்னிடம் குறிப்பு இல்லை. பின்னர் பெற்றுத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக பட்டியலில் குறிப்பிடப்படாத பொருட்கள் மூலம் வரி வருவாய் தனித்தனியாக கணக்கிடப்படுவதில்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டு திரு. கலியபெருமாள் சொல்லி இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. கலியபெருமாள் பேசும்போது, ** என்று சொன்னார்கள். அதற்கு அவர்கள் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்வி நேரத்தில் அப்படி எதுவும் இருக்கக் கூடாது.

வினா எண் 513, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS